1149

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - MAR 1957

# முல்லைக்கொடி

சான்றுண்மை இதழ் – குருகுலத் தாள்

கிழமைப் பதிப்பு] [வெள்ளிக் கிழமையில்

ஆசிரியர்: இளவழகனுர்

| கிளை | துன்முகி, மார்கழி 28உ. | தளிர் |
|---|---|---|
| 9 | 11-1-'57 | 13 |

9-ம் ஆண்டுக்கையொப்பம்
(14-10-56 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | ரூ. | 0 | 1 | 0 |
| ஆயுள் – கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

முகவரி:
குருகுலம்,
மதுராந்தகம் (அஞ்.);
செங்கற்பட்டு மாவட்டம்:
தமிழ்நாடு.

## குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

### அல்லதில் நல்லது

நல்லது செய்யாமல் கெட்டதும் செய்வோன் ஒருவனை நினைவு கூர்வோம். அவன் அறவோன் அல்லன்; கொடியோனுமாவன்: அவன் கதிதான் எப்படி? அவனுக்கு உய்தி உண்டா?

ஒரு குணம் இருந்தால் உய்ந்துவிடலாம் என்கிறார் திருவள்ளுவர்; அதுகூட, முன்வந்து செய்யுங் கடமையாய்ச் சொல்லவில்லை; அக் குணத்தளவில் உள்ளம் அமைந்திருந்தாற் போதும் என்கின்றார். அதுதான், பிறன் மனை நயவாமை!

இதுவே நல்லது செய்ததுபோலவும் ஆகும்; பொதுவில் பண்பட்ட நடத்தையுமாகும் என்று முன் ஒரு குறளிலும், 'அறனென்றே, ஆன்ற ஒழுக்கு' என்பதனாலுந் தெரிவித்தார் ஆசிரியர். அதுதான் எப்படி என்று எண்ணிப் பார்க்கவேண்டும்.

மனத்துக்கு மாசுகள் என்பவை அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் என்பன. இவற்றில் முன் இரண்டு அழுக்குகள் பிறன்மனை நயத்தலில் உள்ளன; பிறனுக்கு மனைவியின் நலம் அமைந்திருத்தல் கண்டு பொறாமை ஒன்று; அவாக் கொள்ளுதலாகிய காமமாடல் மற்றொன்று; அவாவில் இதனினுங் கொடிய அவா வேறு இன்று; அதனால், அழுக்காற்றிலும் இது கொடியதாயிற்று, இவை காரணமாகத் தோன்றும் வெகுளி இன்னாச் சொல் என்னும் ஏனைப் பாவச்செய்கைகளும் கொடுமை மிக்கவாயின.

இதனாலேதான், இவ்வொன்று மட்டும் இனிதாக அமைந்தால் அத்தனை மனமாசுகளின் தீமைகளிலிருந்தும் உய்ய இடமுண்டு என்றார் ஆசிரியர். அல்லதில் இந் நல்லதேனும் பெற்றிருப்பார், ஒரு வகையில் நற்பேறுடையவரே! – இ. அ.

அறன் வரையான் அல்ல
செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

அறன்வரையான் – அறத்தின் வரம்பில் ஒழுகாதவனாய், அல்ல செயினும் – அறனல்லாத பாவங்களைச் செய்வானாயினும், பிறன்வரையாள் பெண்மை – பிறன் வரம்பில் நின்றொழுகுவாளது பெண்மையின்பத்தை, நயவாமை நன்று– விரும்பாமை நல்லது.

அவ்வொரு குணமே நாளடைவில் மேம்பட்டு, அவனைப் பிற பாவச் செய்கைகளும் செய்யாதவாறு தடுத்து, அறத்தின் வரம்பிலும் ஒழுகுவித்து, அவனைத் திருத்திவிடும் என்றபடி.

அறன் அறச்செயல்களையும் அல்ல அல்லாத செயல்களையும் உணர்த்தும்; செயினும் என்பதனால் இதுபெறப்பட்டது.

பிறன் மனைவியைப் பிறன் வரையாள் என்றார், அவனிற் பாகமாதலின். ஒவ்வொருவனும் வரையறை தெரிந்து ஒழுகுதற்குரியன் என்பது குறிப்பு.

பெண்மை காரணமாக விரும்பலாகாது என்றற்குப் 'பெண்மை' என்றார்.

''என் கடன் பணி செய்து கிடப்பதே''



''யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா''

—புறநானூறு.


# முல்லைக் கொடி

| இலை 9 | துன்முகி, மார்கழி 11-1-57 | தளிர் 13 |
|---|---|---|


## பொங்கற் பெருநாள்

உழுதொழிலால் உலகைப் புரந்தவர் தமிழ் மாந்தர். நாட்டில் அறமும் பொருளும் இன்பமும் செழிக்கவும் கலையும் தொழிலும் நிலை பெற்றுயரவும் 'ஊன்று சால் மருங்கில் ஈன்றதன் பயனே' உதவ வல்லது என்ற உண்மையை இனிதறிந்தவர் தமிழர். அந்நாள் ஆண்ட அரசரும் உழவின் முதன்மையை நன்குணர்ந்து ஆறுதொட்டும் குளம் பெருக்கியும் உழவர்க்கு வேண்டுவன உளம் அறிந்துதவியும் நாட்டின் செழுமையைப் பேணி வளர்த்தனர். நல்லன கருதிய மாந்தர்க்கு இயற்கையும் உதவியது. மழை தொழில் உதவிற்று. மாநிலம் செழித்தது. வித்தியது ஒன்று ஆயிரமாகத் தழைத்தது. நாடும் காடும் விரும்பிய படியெல்லாம் விளைவுகள் கண்டன. நோயும் துன்பமும் நீங்கின. 'இல்லோர் என்பார்' இலராயினர்.

ஆவணிப் புது மழையின் போது நிலங்களில் விதை தெளித்தல் தொடங்குகிறது. வயல்களில் முளைத்த பயிர்கள் உழவர்களால் ஆவியும் கண்ணும் போல அருமையாகப் பேணி வளர்க்கப் படுகின்றன. மார்கழிக் கடைசியில்வயல்களில் அறுவடை தொடங்குகிறது. வயலில் விளைந்த நெல்லும் கரும்பும் மஞ்சளும் இஞ்சியும் வரகு சாமை துவரை யாதிய பொருள்களும் கொணர்ந்து குவிக்கப்பெறுகின்றன. களங்களில் மலை மலையாகப் பொன்னெடுங் குவியல்களாக நெல் குவிக்கப் பெறுகிறது. இது காறும் மார்கழிக் கடுங்குளிரில் உள்ளமும் உடலும் நடுங்கிச் சோர்ந்த மக்கள், புது வருவாய் கண்டதும் துன்பங்களை அடியோடு மறக்கின்றனர். அவர்கள் முகத்தில் புத்தொளியும் புதுத்தெளிவும் வீறு கொள்கின்றன.

உழவுக்கு உதவிய உத்தமத் தொழிலாளர்க்கும், தாமே வாழமாட்டாத காணார் கேளார் கால் முடப்பட்டார் ஏழை எளியவர் முதியார்க்கும் தம் அறம்புரி சிந்தைமகிழ உழவர் பெருமக்கள் களத்திலேயே தம் வருவாய்களில் பகுத்து உதவுகின்றனர். எஞ்சியதைக் கொணர்ந்து வீடுகளிற் குவிக்கின்றனர்.

ஆண்டவன், அலர்கதிர்ச் செல்வனாகத் திகழ்ந்து காலமழைகளைக் கருணையோடு உதவி விளைவுச் செல்வம் மிகுதிப் படுத்திய பேரருளை நினைந்து வயல்விளை செல்வம் கிடைத்தவுடன் முதற்கடமையாக அவன் திருவடிகளைப் போற்றிப் பணிவதே சிறந்த செயல் என்று தமிழர் எண்ணினர்.

ஆகவே, தைத்திங்கள் முதல் நாள், அலர்கதிர்ச் செல்வனைத் தமிழ்ப் பெருமக்கள் வழிபடும் பொங்கற் பெருநாளாகத் திகழ்கிறது. தமிழன் கண்ட பெருவிழா நாளாகப்பழைய நாளிலிருந்துபொங்கல்விழாகொண்டாடப் பெறுகின்றது.

உழவர்தம் உழுதொழிலால் கண்ட விளைவுச்செல்வம் வீடு தேடிவரும் நாட்களைப் பெருவிழாவாகக் கொண்டாடியதில் வியப்பில்லை.

பொங்கல்விழா கொண்டாடப் பெறாத தமிழர் இல்லமே நம் நாட்டில் காண முடியாது. ஏனைய விழாக்களை அவ்வளவு கருத்தாக எண்ணாதவர்கள் கூடப் பொங்கல் நாளன்று தம்மால் இயன்ற அளவு இதனைக் கொண்டாடாமல் இரார். வீடுகள் வெண்சுதை தீற்றப்பட்டும் செம்மண் கீற்றுக்கள் வரையப்பட்டும் மணம் பெறு நங்கையர் போலத் திகழ்வது கண்ணுக்கும் கருத்துக்கும் இன்பம் பெருக்கும். மக்கள், புதுப் பானைகளில் ஆவின் பாலை உலையாகப் பெய்து புதுவுருவாய் தந்த முல்லை நிறப் புத்தரிசியை இட்டு நெய்ம் மணம் கமழ அட்டுக்குவித்த பொங்கலமிழ்தத்தைச் செங்கதிருக்கும் மூத்த பிள்ளையார்க்கும் வைத்துப் படைத்தும் 'பொங்கலோ பொங்கல்!' என்று மகிழ்ச்சி பொங்கக் கூவியும்இன்புறுவார்கள்.

மனைவி மக்கள் உற்றார் பெற்றார்நண்பர்ஆகியவரோடுகலந்து மகிழ்ந்துபொங்கலமிழ்தம் உண்ணும் தமிழர் இல்லங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாகச் சிறந்து விளங்கும் இன்பவுலகங்கள் போலவே காட்சியளிக்கும். உணவு கொண்டபின்

7-ம் பக்கம் பார்க்க)

## கலைப் பகுதி — உள வலிமைக்கு

# தமிழர் மருத்துவக் கலை

(TAMILIAN MEDICAL SCIENCE.)

(தமிழாக்கம் சி. து. க.)

வான நூலும் அதற்கினமான வேறுபிற கலைகளும் சிறப்புற்றிருந்தது போலவே மருத்துவக்கலையும் தமிழ் நாட்டில் நெடுங்காலத்துக்குமுன்பே உயர்ந்த நிலையில் விளங்கி வந்தது. ஆரியரும், மங்கோலியரும் நம் நாட்டில் காலெடுத்து வையாத மிகப் பழைய காலத்திலேயே தமிழர், மருத்துவக் கலையில் தேர்ச்சி பெற்று விளங்கினர்

தமிழர்களுக்குத் தாயகமாக விளங்கிய தென்னிந்தியா (தக்காண பீடபூமி) இயல்பிலேயே செடிகொடிகள் மூலிகைகளுக்குப்பேர் போனது. தமிழகத்தில் இருக்கும் கொல்லிமலை, வெள்ளிமலை, சுருளிமலை போன்ற மலை நாடுகளில், மருந்துக்குரிய செடிகொடிகளும் மூலிகைகளும் இன்றும் மிகுதியாகக் கிடைக்கின்றன. ஒவ்வொரு மலைக்கென்றும் தனித்தனி நிகண்டுகள் (DICTIONARIES) அந்தந்த மலைகளில் கிடைக்கும் மருந்துச் சரக்குகளை விளக்கி எழுதப்பட்டுத் தமிழ் நாட்டில் வெளிவந்துலவின. அவை கொல்லிமலை நிகண்டு, சுருளிமலை நிகண்டு, வெள்ளிமலை அகராதி என்பனவாகும்.

அநேக இடங்களில் மலைகள் புல்பூண்டுகள்கூட முளையாத வெறும் பாறைகளாக இருப்பதுண்டு. ஆனால் தமிழகத்து மலைகள் பெரும்பாலும் அவ்வாறல்லாமல் பச்சைப் பசேலென்று மரங்களும் செடி கொடி வகைகளும் போர்த்து இனிய காட்சியுடன் திகழ்வதைக் காணலாம்.

தமிழ் மாந்தர் இயல்பிலேயே ஊக்கமும் நுண்ணுணர்வும் வாய்ந்தவர்கள். உய்த்துணரும் பண்பு மிக்கவர்கள். ஒரு பொருளை நுணுகி ஆராய்ந்து அதன் பொது வியல்பு சிறப்பியல்புகளைக் கண்டறிவதில் ஒப்புயர்வற்றவர்கள். அவர்களைச் சிந்தனைச் சிற்பிகள், உணர்வுப் பிழம்புகள் என்று கூறலாம். தியாக சிகரங்கள் என்றும் பாராட்டலாம். பொதுவில் அவர்களே உலகின் மூளையின் வடிவங்களாக இருப்பவர்!

தமிழ் நாட்டின் இயற்கையான சூழ்நிலைகள், மருந்துச் செடி கொடி மூலிகையாதிய இயல்பான வாய்ப்புக்கள் இவை அனைத்தும் தமிழ் மாந்தர்களின் மருத்துவக்கலை ஆராய்ச்சிக்குத் துணை புரிந்தன அக்கலையில் மேலுமேலும் ஊக்கமாக ஊடுருவிச் சென்று ஆழ்ந்து ஆராய்ந்து பெரும் வெற்றி காண்பதற்கு அவர்களுக்கு உதவி செய்தன.

தமிழ் நாட்டு முடி வேந்தரான சேர சோழ பாண்டியர் ஆங்காங்கும் மருத்துவ ஆராய்ச்சிக் கழகங்களும் கல்லூரிகளும் நிறுவி இப்பெருங்கலையைப் பேணி வளர்த்தனர்.

கடைச் சங்க காலத்தில் மதுரையைப் பாண்டியப் பேரரசர்கள் சிறந்த நிலையில் செங்கோலோச்சியபோது, மருத்துவன் தாமோதரனார் என்னும் பேரறிஞர், மிகச்சிறந்த மருத்துவராகவும் 'இரண வைத்தியராக'வும் திகழ்ந்ததோடல்லாமல் தமிழ்ச் சங்கத்திலும் பெரும் புலவராகத் திகழ்ந்திருந்ததாகத் தமிழக வரலாறு கூறுகின்றது. கடைச் சங்க காலத்திலும் அதன்பின்னரும் மருந்துகள் தொடர்பாக எத்துணையோ நூல்கள் எழுந்தன.

பின்வருபவை முற்கால மருத்துவ நூல்களின் பெயராகும்.— 1பெருந்திரட்டு 2குறுந்திரட்டு 3 விதி நூல் 4உடல் நூல் 5சிவசாலம் 6 சத்தி சாலம் 7 முருகசாலம் 8 மருத்துவக் கண்ணாடி 9 நாடி நூல் 10 செந்தூரம் - 300-11 மணிக்கட்டு 4000-12நீறு 200-13 அகத்தியர் இரதம் 14 இந்திர சாலம் 15 முருகர் இரதம்.

இன்னும் இவைபோல் வன பல உண்டு. மேற்கூறிய நூல்களில் ஓரிரண்டு வரிகள் ஆங்காங்கு நமக்குக் கிடைத்ததைக் கொண்டு அவற்றின் பெருமை நமக்கு விளங்குகின்றது.

இத்தகைய பெருமை வாய்ந்த மருத்துவ நூல்களின் கதி யாதாயிற்று? மருத்துவன் தாமோதரனார் சங்க காலத்தில் செய்தருளிய மருத்துவக்கலை நூல்கள் எங்கேபோயின?

இலெமூரியா கண்டம் இந்தியப் பெருங்கடலில் மூழ்கியபோது (கடைச்சங்கத் தோற்றத்துக்கு முன்பு) பெருவாரியான மருத்துவ நூல்கள் கடலில் மூழ்கிப்பழுதாயின. ஆயின், கடைச்சங்க காலத்திய நூல்களின் முடிவு யாதாயிற்று? இதற்கும் ஒரு விடை கிடைக்கின்றது. சிலப்பதிகாரகாலத்தில் ஆரியப்படை கடந்தநெடுஞ்செழியன் கோவலனை ஆராயாமல் கொல்வித்ததன் காரணமாகக் கண்ணகி கொண்ட சீற்றத்தின் விளைவால், கி.பி. 144ல் மதுரை மாநகரில் விளைந்த பெருந்தீயில் பெருவாரியான நூல்கள் எரிந்து போயின என்பதே பொருத்தமான காரணம் என்னலாம்.

(வரும்)

## மொழிப் பகுதி – அறிவு வலிமைக்கு

# யானையின் மான வுணர்ச்சி

(முத்து. வடிவேல்)

முத்தொள்ளாயிரம் என்பது தன்னை உருவாக்கிய கவிஞரின் ஊரையும் பேரையும் இழந்த ஒப்புயர் வற்ற நூல். சேர, சோழ, பாண்டியர்கள் இந்நூலின் பாட்டுடைத் தலைவராக விளங்குகின்றனர். நூற்பெயரை நோக்கும் போது முடியுடை வேந்தர் ஒவ்வொருவரைக் குறித்தும் 900 செய்யுட்களாக 2700 செய்யுட்களை யுடைய நூல் என்னும் பொருள் தருகிறது. புறத்திரட்டின் மூலம் நமக்குக் கிடைத்துள்ள செய்யுட்கள், புறத்தைப் பற்றி 44ம் அகத்தைப் பற்றி 65ம் ஆக 109 செய்யுட்களே. இறந்தவை போக எஞ்சிய செய்யுட்களின் சுவையை நோக்கும் போது முழுநூலும் கிடைக்கப் பெறவில்லையே யென்ற ஏக்கம் நம்மை வாட்டுகிறது. தான் எடுத்துக் கொண்ட அரசரில் ஒவ்வொருவரைப் பாராட்டும் போது அவர்களையே உயர்த்திப் பாராட்டும் பொது நோக்குடையவர் நம் கவிஞர். இப்பொது நோக்கைக் கூர்ந்து நோக்குங்கால் இந்நூலின் கவிஞர் இளங்கோவடிகள் தாமோ என ஐயம் ஏற்படுகிறது. முழுநூலுடன் உருவாக்கிய உத்தமரின் பெயர் நமக்குக் கிடைத்திருக்குமாயின் அவர் இளங்கோவடிகளைக் காட்டினும் உயர்ந்த இடம் பெற்றிருப்பார் என்பது திண்ணம். இக்கட்டுரையில் யானைமறம் என்ற பகுதியில் வரும் இரண்டு செய்யுட்களின் பொருட் சுவையினை ஈண்டு ஆராய்ந்து இன்புறுவோம்.

மலைபோன்ற தோற்றத்துடன் கடல்போன்று பேரிசைச்சலிட்டுக்கொண்டும் மேகங்கள் காற்றில் விரைந்து செல்லும் தன்மையைப் போன்றும் வேகத்துடன் செல்கிறது ஒரு யானை. அதன்மேல் அமர்ந்திருப்பவன் கிள்ளி தான் என்பதைக் காற்றில் மிதக்கும் புலிக்கொடிதேற்றமாக எடுத்துக் காட்டுகிறது. கடல்புரண்டு வருவதைப் போன்று பேரிரைச்சலுடன் நால்வகைப் படைகளும் பின் தொடர்கின்றன. இவற்றில் யானைப் படைகளே முன்னேக்கிச் செல்கின்றன.

பகை நாட்டினர் இப்படைக் கடலைக் கண்டு பயந்து விட்டனரோ என்னவோ? கோட்டையின் வாயில் மூடப்படுகிறது. சோழனின் கோபத்தைக் கிளறுவதற்குக் காரணமாய் இருந்த அவர்களின் வீரம் இப்போது கோட்டைக்குள் அடைபட்டு விடுகிறது.

கிள்ளியின் சேனைக்கடல் கோட்டை வாயிலை நெருங்குகின்றன. கோட்டையோ பலமான கோட்டை. வாயிற் கதவுகளோ வன்மை வாய்ந்தவை. நெடுநாள் முற்றுகை யிட்டும் பயன்பெற முடியாதென்று கருதியிருந்தனர் அந்நாட்டவர்.

நிலைமை நேர்மாறாகிவிட்டது. மத ஊற்றுமிக்குமதி மயங்கியிருக்கும் மலைக்களிறுகளால் மதிற் சுவர்தாக்கப் பட்டது. உலகமே நிலைபெயரினும் அரண் தகர்வதாகக் காணவில்லை. யானைகளின் முயற்சி மலையில் மோதும் மழைத்துளிகளைப் போன்று மறைந்து போயிற்று. கிள்ளியின் களிறு தனியாகத் தான் மட்டும் கோட்டையின் கதவை உடைப்பதில் ஈடுபட்டது. அது வெற்றி பெறுவது திண்ணம் என்பதற்கறிகுறியாக அக்கதவும் ஆட்டங் கொடுக்க வாரம்பித்தது. என்ன வியப்பு! அதன் தந்தங்கள் கதவில்பாய்ந்தன. உடனே கதவு யானையின் தந்தங்களில் கோக்கப்பட்டு வெளிப்பட்டு விட்டது. அதன் தோற்றம் அப்போது அலைகடலின் மத்தியில் பாய் மரம் விரிக்கப் பெற்ற கப்பலே போன்று காணப்பட்டது.

கப்பலுக்கும் இந்த யானைக்கும் வித்தியாசம் ஏது? கப்பல் இருப்பதோ அலை மோதும் கடல். இந்தக் களிறு நிற்பதோ ஆரவாரிக்கும் படைக் கடல். இக்கருத்துள்ள செய்யுளைச்

7 மலரளைஇ - மலர் படிந்து; சுழிந்து - சுழன்று; மறுகுறும் - உலவும்; இணர் - பூங்கொத்து; புனை - அலங்கரிக்கப்பட்ட.

8 பூவை-நாகணவாய்ப் பறவை; நவிலும்-சொல்லும்.

9 அமைதியும் அருளும் நிறைந்த அழகிய தவநிலை என்க; ஐஞ்ஞான்ற-ஐந்தாகிய; புலப்பகைகள்-சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் புலன்களாகிய பகைகள்; பெருவெளி - ஆகாய வுருவாக விளங்கும் ஆண்டவன்; மேதக்கோன் - மேன்மை பொருந்தியவன்.

10 பெண்ணமுதம் - பெண்களில் அமுதம் போன்ற உமாதேவியார்; பிறைச்சடிலம் - பிறை தங்கிய சடை; நனி மாறி - மிகவும் மாறி, ஓர்ந்தான்-எண்ணலானான்.

11 வாழுநர் - வாழ்பவர்; தேம்பிட - வருந்திட; கோள்-தீய கிரகம்; என்கொலோ-என்னகாரணமோ.

12 என் செய்கேன்-என்னசெய்வேன்;நவிலல் ஆவதோ-சொல்லப்படுமோ.

13 மண்ணுறு திகிரி-குயவனின் தண்ட சக்கரம், மறுகி-குழம்பி, மறுக்கம்-குழப்பம்.

14 தண்ணறுஞ் சடை-குளிர்ந்த (கொன்றை) மணம் நிறைந்தசடை.

15 ஆர்வவேரை அறுத்தவன் - ஆசையை அறவே நீத்தவன். ஓர்தல்-ஆராய்தல்.

16 கொல்லை - முல்லை நிலம்; மூசுவண்டு - மொய்க்கும் வண்டுகள், ஒல்லை - விரைவில்.



நவ்வியங் கண்ணாள் பங்கன்
நகைமுக மலர்ந்து கூற
அவ்விய மில்லா நெஞ்சத்
தருந்தவன் வழுத்து கின்றான்.

105 ஆலமார் கண்டத் தெந்தாய்
அடியரேஞ் செல்வ மே!முக்
காலமுங் கடந்த நாத!
கவினால களித்துக் காத்து
மேலுமோர் செயலுஞ் செய்வாய்
வியன்குணக் குன்றே! நாயேன்
சீலமில் லாம லெண்ணுஞ்
சிறுபிழை பொறுத்தல் வேண்டும்.

106 இறைவநின் செயலே யாவும்
என்றறிந் தேனி லங்கும்
பிறைமதிச் சடையாய் நாயேன்
பிழையெலாம் பொறுத்தி யென்றே
நிறைதவச் செல்வன் வீழ
நிகரிலான் முறுவல் பூத்து
மறையவற் காகி கூறி
மறைந்தனன் விண்ணின் மாதோ.

## வேறு

107 இறைவ னார்செய லேற்ற மெண்ணுபு
மறைவ லாளுள மகிழ்ந்து முன்னைபோற்
கறையி லாமலர்க் காவி னீடிய
உறையு ளார்ந்துயர் தவமுற் றனரோ.

108 தெரிவு றக்கதை சிந்தை செய்குவீர்
பெரிய ஞாலம்வாழ் பிறங்கு நல்லுயிர்க்
குரிய செய்கைக ளுறுவ வோர்ந்திடின்
திருவ ருட்செயல் என்று தேர்மினே.

109 வாழி செந்தமிழ் வாழி நல்லறம்
வாழி செந்தமிழ் வகைய றிந்தவர்
வாழி செந்தமிழ் வயங்கக் காப்பவர்
வாழி செந்தமிழ் வளரும் வையமே.

(முற்றும்.)



## குறிப்புரை.

**கடவுள் வணக்கம்**

முழுமுதலாம் யானை — முதற்கடவுளாகிய விநாயகர்; நாம், திருவடிப் புகழ் நூல்களைக் கற்றுக் கலந்து ஓதினால் தமிழ்த்தையல் திருவருட் செல்வமும் புகழும் பெற்று, உலகில் எண்ணிய எண்ணியாங் கெய்தலாம் என்பது கருத்து. கண்டீர், முன்னிலை யசை.

1 வையம் - உலகு; பல படித்தாய் - பல வகையாக; மாமேவும் - திருமகள் வாழும்,

2 கண்ணுதலோன் - சிவபிரான்; பண் - இசை; பான் மொழியாள் - பால்போலும் மொழியினை யுடையாளான; அங்கயற்கண் பெண் - மீனாட்சி யம்மையார்.

3 'மேகலையும்.........அணிகலன்கள்' என்பது, மணிமேகலை, சிலப்பதிகாரம், திருக்கோவையார், சிந்தாமணி - என்னும் நூல்களைக் குறித்தது. தமிழரசியின் அணிகலன்களாகும் இவை. மணிமொழி - (மாணிக்கவாசகரருளிய) திருவாசகம், இஃது தமிழரசியின் வாக்காகப் பாராட்டப் பெற்றது.

4 மைத்துறும் - கருமை நிறைந்த; ஆல், அசை.

5 புயலெழுந்த என-மேகக்கூட்டங்கள் எழுந்துலவின என்று சொல்லும்படி; புகர் - புள்ளிகள்; செயிர்-குற்றம்.

6 விது - சந்திரன்; வியன் - பெருமை; நதி...சடையார் - சந்திர சேகரரான சிவபிரான்; சேவடிமலர்கள்...கேண்மையினார் - திருவடி மலர்களை நிலையாகக் கொண்ட நெஞ்சம் வாய்த்த தவசிகள்.

சுவைத்துச் சுவைத்து மகிழுங்கள்.

அயிற்கதவம் பாய்ந்துழக்கி
ஆற்றல்சால் மன்னர்
எயிற்கதவம் கோத்தெடுத்த
கோட்டால்-பனிக்கடலுள்
பாய்தோய்ந்த நாவாய்போல்
தோன்றுமே யெங்கோமான்
காய்சினவேல் கிள்ளி களிறு.

அரண் தகர்ந்தது. அன்னியரின் ஆக்ரமிப்பைக்கண்டும் எந்த நாடுதான் வாளாவிருக்க முடியும்? உடலில் உயிர் உள்ளவரை போரிட்டு மாய்ந்தன எதிரியின் படைகள். பகைமன்னரின் முடியும் கிள்ளி களிற்றின் கால்களால் இடறப்படுகிறது. இது போன்ற அரண் தகர்க்கும் செயல் பலவற்றில் ஈடுபட்டு வெற்றியுடன் திரும்புகின்றன கிள்ளியின் படைகள். நீண்ட நாள் பிரிவுக்குப்பின் தாய் நாட்டைக் காண அனைவரும் ஆவலுடன் விரைந்து செல்கின்றனர். கிள்ளி களிற்றுக்கு மட்டும் ஏனோ நடை ஓடவில்லை. படை வரிசைகளுக்குப் பின்னால் தள்ளாடித் தள்ளாடி நடந்து வருகிறது. அதனுள்ளத்தில் ஏதோ தாங்க முடியாத வேதனை நிரம்பி யிருப்பதாக அதன் முகம் விளக்கிக் காட்டியது. 'அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சிற் கடுத்தது காட்டும் முகம்' என்பது பண்டைத் தமிழுரை யன்றோ!

அரசன் முதல் அனைவரும் தத்தம் இல்லம் ஏகினர். காதலிகளின் அல்லது இல்லக் கிழத்திகளின் பிரிவுத் துயர் போக்கி இன்பம் துய்க்கின்றனர் கிள்ளி களிறு மட்டும் தன் இருக்கைக்குப் போகாமல் புறமதிலுக்கு வெளியில் இப்படியும் அப்படியும் தள்ளாடித் தள்ளாடி நடைபோடுகிறது. இதைக்கண்ணுற்ற நம் கவிஞரின் கண்களுக்குக் காரணம் தோன்றி விட்டது. கீழ்வரும்கவிதை உருவாகிறது. கவிதையைச் சுவைத்துக் காரணத்தை நீங்களே தெரிந்து கொள்ளுங்கள்.

கொடிமதிற் பாய்ந்திற்ற
கோடும் அரசர்
முடியிடறித் தேய்ந்த
நகமும் – பிடிமுன்பு
பொல்லாமை நாணிப்
புறங்கடை நின்றதே
கல்லார்தோட் கிள்ளி களிறு.

விளக்கம் தேவைப் படுபவர்களுக்கு. ஏன்? விளக்கம் தெரிந்தவர்களுக்கும் நினைப் பூட்டுகிறேன். உங்களில் ஒருவருக்கு இன்னும் மணமாக வில்லை யென்று வைத்துக் கொள்ளுவோம். அவர் எதிர் வீட்டிலோ அல்லது பக்கத்து வீட்டிலோ உள்ள ஓர் அழகியைக் காதலிக்கிறார்; ஏதோ அலுவல் காரணமாக அவர் வெளியூருக்குச் சென்று திரும்புங்கால் தற்செயலாக ஆபத்துக்குள்ளாகிறார். அவருடைய மூக்கு உடைந்து விடுகிறது. கீர்து பின்னப்படுகிறது. அல்லது அவருடைய விரல்களை யெல்லாம் இழந்துவிடுகிறார். இந்நிலையில் வீட்டுக்கு வந்த அவர் தம்காதலியைக் காண விரும்ப முடியுமா? அவர் ஆண்மைப்பீடு அதற்கு இடந்தருமா? கிள்ளியின் அழகிலக்கணம் சிறந்த களிறு, ஒடிந்த தந்தங்களுடனும் தேய்ந்த நகங்களுடனும் தன் காதலியாகிய பிடியின் முன் செல்ல மனமின்றி புறங்கடை நின்றதில் வியப்பென்ன!

* * * *

Phone: 55034 Tel. Enkaya
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்.
53, கிடங்குத் தெரு.., சென்னை 1.

## சமயப் பகுதி — அருள் வலிமைக்கு

# அம்மானுக்கு ஆட்பட்ட அன்பு

(சி. து. க.)

இல்லற நிலையில் ஒழுகிச் சிவநெறி நின்று பேரின்பம் எய்திய புனிதவதியார் என்னும் காரைக்காலம்மையார் பெருமை அளவிட முடியாதது. பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல் சிறந்து எம்மான் அடிக்கே சேர்ந்த இவ்வம்மையார் திருப்பாடல்கள், பதினோராந் திருமுறையின் முதற்கண் வைத்துப் போற்றப்படுகின்றன.

அம்மையார் இல்லற வாழ்வில் பேரழகுச்செல்வியாகத் திகழ்ந்தவர்கள்.

'மயிலைப் புறங்கொண்
மென்சாயன்
மகளிர் கிளவி
யாழி னெடுங்
குயிலைப் பொருவும்
காரைக்காலம்மை'

என்று பாராட்டப்பெறும் அழகின் திருவுருவாகத் திகழ்ந்த காரைக்காற்செல்வியார், பின்னர் சிவபரஞ்சுடரிடம் கொண்ட பக்தியின் முதிர்வால் உலகவாழ்வுக்குரிய தசையுடலத்தை வெறுத்தொழித்து இறைவன் அருளால் அன்புருவான என்புருவாகும் பேயுடலம் தாங்கி மகிழ்ந்தனரென்று கூறுவர். பேயுருவத்தோடு கைலை மலையில் தலையால் நடந்து சென்று இறைவன் திருமுன் நணுகினர் என்றும், இறைவன் அன்போடு "அம்மையே வருக!" என்று அழைக்க அம்மையார் "அப்பா!" என்று ஆராமையோடு ஆண்டவனை நெருங்கினர் என்றும், இறைவன் "வேண்டுவதனைக் கேள்" என்று மொழிந்த அளவில் அம்மையார் பின்வருமாறு கேட்டனரென்றும் சேக்கிழார் திருவாய்மலர்ந்தருளியுள்ளார்.

''இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்
[றூர்
பிறவாமை வேண்டு மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை
[யென்று
மறவாமை வேண்டு மின்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து
[பாடி
யறவாநீ யாடும்போதுன்
அடியின்கீழ் இருக்க என்றூர்.

— (பெரிய)

'இறவாத அன்பு' என்பது என்றும் குறையாத பேரின்பம். இதனை அருள் புரிவது ஆண்டவன் செயல். எனவே அவன் கடமையைப்பற்றித் தாம் சிந்திப்பதைவிடத் தாம் செய்ய வேண்டிய இறைபணியிலேயே கருத்தூன்றியவராய், அதற்குரிய மெய்யன்பையே பெரிதும் வேண்டி, ஒருகால் தமக்குப் பிறப்பு வாய்த்தால் ஆண்டவனை மறவாமல் அருட்பணிகளில் ஈடுபடும் மெய்யன்பினையேபெரிதும் விரும்பிக் கேட்டனர். இறைவனும் அருள்புரிந்தனன்.

அம்மையார் இத்தகைய அன்பினையே உடல் பொருள் ஆவி அனைத்துமாகக் கொண்டு வாழ்ந்தவர். இதனாலேயே, வெளியுலகுக்குப் பேயுருவாக வாழ்ந்த அம்மையார் ஆண்டவன் அருட்கருத்தில் அன்பின் திருவுருவாக இடம்பெற முடிந்தது. தாம் கொண்ட இவ்வன்புக்கருத்தினைத் தம் அருண்மொழிகள் மூலம் அம்மையார் அருள் செய்துள்ளார்கள்.

பொதுவாக, மக்கள் புண்ணியம் செய்வது மறுமையில் மேலும் சிறந்த பொன்னும் பொருளும் போகமும் பெறும் பொருட்டாகவே உள்ளது. பலன் கருதிச் செய்யும் இப்போலிப் புண்ணியச் செயல்களுக்கே ஐம்புலன்களும் உதவுகின்றன. ஆனால் இவை நிலையான இன்பத்துக்குரியன அல்ல. என்றிருந்தாலும் அழிதன் மாலையவான இவ்வின்பங்களை உதவும் புண்ணியச் செயல்களும் அவற்றுக்குத்துணை செய்யும் புலன்களும் ஆண்டவனிடம் கொள்ளும் அன்புக்கு இணையாகமாட்டா. இவ்வன்பே நிலையான பேரின்பத்தை அருளவல்லது. இறைவனிடம் இத்தகைய அன்பு நிலையில் காரைக்காலம்மையார் சிறந்து நின்றமை.

'புண்ணியங்கள் செய்தனவும்
பொய்ந் நெறிக்கட் சாராமே
எண்ணியோ ரைந்தும்
இசைந்தனவால்— திண்ணிய
கைம்மாவின் ஈருரிவை
மூவுருவும் போர்த்துகந்த
அம்மானுக் காட்பட்ட அன்பு.

என்னும் திருவிரட்டை மணிமாலை அம்மை திருவாக்கு விளக்குகின்றது

———

(௨-ம் பக்கத் தொடர்ச்சி)

மாலையில் இன்னும் முற்றாத நிலையில் வயல்களிற் காணும் செந்நெல் விளைச்சல்களின் மேலெல்லாம் பொங்கலோ பொங்கல்! என்ற ஆரவாரம் பெங்கப் பொங்கல்நீரை விளைவுகளில் காணும் நோய்கள் நீங்கவென்று மக்கள் இறைத்து மகிழ்வது கண்கொள்ளாக் காட்சி நல்கும்

உழுதொழிலுக்கு உதவும்நண்பர்களைப் போலத் தம் முயற்சிகளுக்கெல்லாம் உயிர்த்துணையாக உதவிபுரிந்த மாடுகளையும் ஆடுகளையும் தமிழர் மறவாது 'மாட்டுப் பொங்கல்' என்று கொண்டாடும் விழா தை இரண்டாம்நாளன்று நிகழும். அதற்கு அடுத்த நாள் நல்லோர் ஒருவரை ஒருவர் கண்டு மகிழும் திரு நாளாகத் திகழ்கிறது

தமிழன் பெருவிழாவாகச் சிறந்து ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வழிபாட்டுக்குரியதாக விளங்கும் இப் பொங்கற் பெருநாளை உயரிய முறையில் உரிய வகைகளிற் கொண்டாடி மகிழ்வோம், மனமாசு நீக்கி, நடு நிலைமை பூண்டு நல்லனவற்றைப் பாராட்டி தீயனவற்றைக் கூசாது கடிந்தொதுக்கும் தமிழன் பண்பை வல்லாங்கு வளர்க்கச் செங்கதிர் முன்னர் உறுதி பூண்போம். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம். வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம். வாழ்க பொங்கற்றிரு நாள்!

சி. து. க.

## இணையிலாத் திருநாள் !

மேழிச் செல்வங் கோழை படாதெனக்
காழில் ஔவை காட்டிய நெறியினில்
உழைத்திடு மாந்தர் உளமெலாம் பொங்கத்
தழைத்த நன்மஞ்சள் கரும்பொடுஞ் செந்நெல்
மேம்படக் கிடைக்கு மிகுவளத் திங்களில்
யாமுமெம் இன்ப மகளிருங் கூடித்
தாமரை மலரத் தளிர்த்த செங்கதிரை
வாழ்த்தியும் வணங்கியும் வளர்புக ழிசைத்தும்
ஆழ்ந்தநன் மகிழ்வி லார்ந்திடுஞ் செழுநாள்
இணையிலாத் திருநாள் எமதுதைப் பொங்கலில்
உழைப்பவர் உயர்க! உழவர்கள் சிறக்க!
மழைவளன் செறிந்து மாநிலம் செழிக்க
அன்பும் அறனும் ஆர்ந்த இல்வாழ்க்கை
மன்பதை யுலகில் மாசற விளங்குக!
ஏர்வளர் சோலை எழில்வளர் சாலை
பேர்பட வியற்றுஞ் சீரதன் மேலாய்
மாசறு கல்விச் சாலைகள் மலர்க!
பேசறு தமிழின் பெரும்புக ழோங்குக!
அறம்பொரு ளின்ப அணிவகுத் திட்ட
திறம்படு வள்ளுவன் திருவடி வாழ்க!
ஓங்குக! கல்வி யுயர்நிலை யெய்தி
வீங்குக! தமிழர் மெய்ப்புக ழுயர்ந்தே.

— முத்து. வடிவேல்

## திருக்குறள் பதிப்புகள்:

திருக்குறளின் பல ஆங்கிலமொழி பெயர்ப்புக்களுடன், ஹிந்தி வங்காளி கன்னடம் தெலுங்கு முதலிய மொழிபெயர்ப்புக்களும் திருக்குறள் பற்றித் தமிழில் பலரும் எழுதியுள்ள உரைகள் விளக்கங்கள் ஆராய்ச்சிகள் முதலியனவும் தமிழ்ப்பகுதியில் திரட்டிவைக்கப்பட்டிருந்தன இவை பெரும்பாலோருடைய கவனத்தைக் கவர்ந்துள்ளன சுமார்பதினைந்து வெளிநாட்டு மொழிகளில் திருக்குறள் வெளிவந்திருப்பதையும் பெருமையாகக் கூறிவருகிறோம் ஆயினும் இந்தியமொழி ஒவ்வொன்றிலும் திருக்குறள் மொழிபெயர்க்கப்படவேண்டும் அப்போதுதான் தமிழின் இலக்கியச் சிறப்பைப் பிறமொழியினர் நன்கு அறியமுடியும் திருவள்ளுவர் பெயர்கொண்ட எத்தனையோசகங்களும் கழகங்களும் நம்நாட்டில் உள்ளன அவை பிறமொழிகளிலும் குறள் வெளிவருவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுக்கவேண்டும் அதுவே சிறந்தசேவை திருப்பனந்தாள் காசிமடம் திருக்குறளை ஹிந்தியில் வெளியிட்டு ஏற்கனவே வழிகாட்டியுள்ளது.

பாரதி —டிசம்பர் 1956

## குருகுலச் செய்தி:

### மாணவர் இல்லம் உணவகத்திற்கு ஒரு நாள் செலவு ரூ 20-0-0 (சிலர் மேலும்) ஏற்று அன்புடன் உதவியவர்கள்

(28 - 12 - 56 இதழ்வரை) முன் வரவு ......ரூ. 270-0-0

14. திரு பி. தரம்தாஸ், மேனேஜர், இந்தியன் டிரேடர்ஸ், 158. பிராட்வே, சென்னை.
தம் தாயார் ஹரிபாய், தந்தையார் பொஹிமால் என்போர் பெயரால் இரண்டு நாட்கள் செலவு ஏற்றுள்ளார்கள். (8-1-57) 40-0-0

15. திரு. எம். மணிவேலு அவர்கள், 3, மண்டபம்ரோடு, பாக்கம், சென்னை10. தம் தந்தையார் திரு. முனுசாமிபிள்ளை இழ்ப் அவர்கள்நினைவாக-வியாழக்கிழமை (24-1-57) 20-0-0

16. திரு. கே. வி. சம்பந்தம் அவர்கள், மிராசுதாரர், கிராம முன்சிப், 395, கடலூர்வட்டம். மதுராந்தகம் தாலுக்கா(21-1-57)20-0-0

ஆக இதுவரை வரவு ரூ......350-0-0

### ஆர்வலர் சேர்க்கை.

ஆண்டுக் காணிக்கை ரூ 5-0-0 செலுத்திக் குருகுலத்தில் ஆர்வலர்களாகச் சேர்ந்துள்ளார் பட்டி. இவர்களுக்கு ஓராண்டுக்கு முல்லைக் கொடி தொடர்ந்து இலவசமாக அனுப்பி வைக்கப்பெறும்.

| | | |
|---|---|---|
| 5 | திரு பி. வி. முதலியார், அஹமதாபாத் | ரூ 5 |
| 6 | நா. சங்கரன், சென்னை. 7 | 5 |
| 7 | எஸ். வி இராமச்சந்திரன், சென்னை. 2 | 5 |
| 8 | எல் புஷ்பராஜ், சென்னை. 21 | 5 |
| 9 | ஏ. பி. கோவிந்தராஜுலு, சென்னை. 7 | 5 |
| 10 | ப. தங்கராசன், சென்னை. 13 | 5 |
| 11 | எஸ். பி. இராஜாபாதர், சென்னை. 7 | 5 |
| 12 | கனகசபை, சென்னை. 7 | 5 |
| 13 | சி. டி. சிவராஜ், ஆலந்தூர், | 5 |
| 14 | டி. கே. மாணிக்கம், சூளை. | 5 |
| 15 | எஸ். இராமச்சந்திரன், சென்னை. 4 | 5 |
| 16 | சுந்தரம், சென்னை 1 | 5 |
| 17 | ஜே. சுப்பிரமணியன், சென்னை. 14 | 5 |
| 18 | ஜே. டி. எட்வர்ட், சென்னை. 21 | 5 |
| 19 | வெ. கி. சிவராமன், சென்னை. 7 | 5 |
| 20 | எஸ். டி. மார்க்கசஹாயன், சென்னை. 21 | 5 |
| 21 | எஸ். பக்தவத்சல ரெட்டியார், சென்னை. 29 | 5 |
| 22 | பட்டு பத்மநாபசெட்டியார், சென்னை. 1 | 5 |
| 23 | பி. நடராஜன், சென்னை. 28 | 5 |
| 24 | ஜி. இராஜேந்திரன், சென்னை. 7 | 5 |
| 25 | ஸ்ரீபதி. பி. இ., சென்னை. 7 | 5 |
| 26 | எம். ஆர். சுப்பிரமணியம், சென்னை 6 | 5 |
| 27 | கே தெய்வசிகாமணி, சென்னை 4 | 5 |
| 28 | எஸ் திருநீலகண்டம், சென்னை 14 | 5 |
| 29 | ந. கிருஷ்ணசாமி, சென்னை 21 | 5 |
| 30 | எஸ் சுப்பிரமணியம், சென்னை 4 | 5 |
| 31 | ஏ சேஷாசலம், சென்னை 14 | 5 |
| 32 | ஆர். இராமலிங்கம், சென்னை 4 | 5 |
| 33 | எம். மதுரை, புதுப்பேட், | 5 |
| 34 | ஆர். நடராஜன், சென்னை : 5 | 5 |

ஆக மொத்தம்வரவு ரூ 180

## ஆசிரியர் விரிவுரைகள்:

(நடக்க இருப்பன)

மாம்பட்டு:

16-1-47, புதன்கிழமை காலை 8-மணிக்கு, மதுராந்தகம் தாலுக்கா மாம்பட்டு கிராமம், ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் எட்டாவது ஆண்டு தைப்பூச விழாவில் அருளுரை வழங்குவார்கள்.

வடலூர்:

18-1-57, வெள்ளிக்கிழமை மாலை 3-30 மணிக்கு வள்ளலார் தைப்பூச விழாவில் "ஒளியுடல்" என்பது பற்றிப் பேச்சு

சென்னை:

13-1-57 ஞாயிற்றுக் கிழமை மாலை 6-00 மணிக்குச் சென்னை, சென்னமல்லிகேஸ்வரர்கோயிலில், 'பெரிய புராணம்' விரிவுரை


"குருகுலப் பற்பொடி"

குருகுல இல்லத்திலுள்ள மாணவர்களாலேயே செய்யப் பெறுகிறது.

இதன் ஆக்கம் ஏழைப் பிள்ளைகளுக்கே சேர்வதால் இதனை ஆதரிப்பது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

குருகுலப் பற்பொடி உயர்தரமானது.

பல் கூச்சம் சீழ் வருதல்
பல் தேய்வு செந்நீர் வருதல்
பல் ஆட்டம் வாய் நாற்றம்

மற்றும் பல் தொடர்பான எல்லா வகை நோய்களையும் போக்கி, ஈறுகளைத் தூய்மையாக வைத்துக் கொள்ள உதவும்.

தமிழ் மருத்துவ முறைப்படி அரிய மூலிகைகள், வேர்வகைகள், மரப்பட்டைகள், சேர்த்துக்காலத்திற் கேற்றவாறு நுட்பமுறையில் செய்யப் பெற்றது

ஒரு பை விலை 1 அணா

கோ. உலகநாதன்,
செய்கையாளர்:
குருகுலக் கைத்தொழில் நிலையம்
மதுராந்தகம் (அஞ்).
செங்கற்பட்டு மாவட்டம்


பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்,
குருகுல அச்சகம், மதுராந்தகம் (அஞ்சல்); செங்கற்பட்டு மாவட்டம்: தமிழ்நாடு.